




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 42

# வரவு செலவுத் திட்டம் - 2022




## கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விசேட அறிவிப்பு

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது 10 மாதங்கள் வரை வழங்கப்படுகின்ற ரூபா 20,000 பெறுமதியான உணவுப் பொதியினை 2 வருடங்கள் வரை நீடித்து தொடர்ந்து வழங்குவதற்கு முன்மொழியப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர். பசில் ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அவர் தனது உரையில் மனைப் பொருளாதார பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் அதிகூடிய முன்னுரிமையானது தாயின் தலைமையில் இலங்கையில் உருவாகின்ற எதிர்கால சந்ததியினரின் போசாக்கு பற்றியதாகும்.

உண்மையில் நாட்டுக்கு அவசியமானது அறிவார்ந்த சந்ததியொன்றாகும். பிறக்கின்ற குழந்தையின் அறிவாற்றல் வளர்ச்சி அதிகளவு இடம்பெறுவது தாயின் மடியில் என்பதுடன் பிரசவம் நிகழ்ந்ததிலிருந்து ஆரம்ப காலத்திலாகும். எனவே பிறக்கின்ற குழந்தைகளினதும் தாய்மாரினதும் போசாக்கு மிகவும் முக்கியமானதாகும்.

எனவே, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது 10 மாதங்கள் வரை வழங்கப்படுகின்ற ரூபா 10,000 பெறுமதியான உணவுப் பொதியினை 24 மாதங்களுக்கு அதாவது, 2 வருடங்கள் வரை நீடித்து தொடர்ந்து வழங்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

இதனடிப்படையில், இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 4,000 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 1,000 ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அதேபோல், தாய் மற்றும் சேயினது போசாக்குடன் குடும்பத்தினது போசாக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கு, கிராம சேவை அலுவலர் பிரிவு மட்டத்தில் பொருளாதார ரீதியாக வறுமை நிலையில் காணப்படும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா 15,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அதேபோல், இதுவரை தாய், சேய் உள்ளடங்களாக முழு குடும்பத்திற்குமான போசாக்கு தொடர்பாக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு எமது நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று அவர்களது பொருளாதாரத்தினை வலுப்படுத்த வேண்டிய தேவையினை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே, பெண் தொழில்முயற்சியாளர்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்கான புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றினை நாம் நாடு முழுவதிலும் செயற்படுத்தி வருகின்றோம்.

கடந்த தொற்றுநோய் காலப்பகுதியில் கிராமங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது எமக்குக் கிடைத்த அனுபவங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான அடிப்படையாக அமைந்தன.

அவை,

- கிராமிய மக்களின் உணவுத் தேவையினை நிறைவு செய்தல்.
- கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், உள்ளடங்களாக ஏனைய பொருட்களினைச் சந்தைப்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்ட பிரதான வழங்கல் வலையமைப்பு மற்றும் இணைப்பு.
- எந்தவொரு அனர்த்தத்தின் போதும் தொடரான வழங்கல் மற்றும் பகிர்வினை உறுதிப்படுத்தல். சிறிய கடைத்தொகுதி வலையமைப்பினை கிராம சேவை அலுவலர் பிரிவு மட்டத்தில் உருவாக்கும் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 15,000 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

## காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு

பல்வேறு காரணங்களினால் பல்வேறு காலப்பகுதியில் காணாமற் போனவர்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கு வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவ்வாறு காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு நீதியினைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஒருக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுவதாக அவர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர், பசில் ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட போது அமைச்சர் இதனை தெரிவித்தார். இதேவேளை, வெற்றிபெற்ற வர்களினால் எதிர்த்தரப்பினரை துன்பத்திற்கு ஆளாக்குவது நவீன சமூகத்தில் மிகவும் வெறுக்கத்தக்க கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆயினும் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் எதிர்தரப்பு அரசியல் கருத்துடையவர்கள் மிகவும் மனிதாபிமானமற்ற வகையில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டனர். அவர்களது மனோநிலையினை எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. அக்காலப்பகுதியில் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவது எமது கடப்பாடாக மாறியுள்ளது. இவை அனைத்துக்குமாக நீதி யினைப் பெற்றுக் கொடுப்பதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிவதாக அமைச்சர் தெரிவித்தார்.



# அரசாங்க பணியாளர்களுக்கு மீண்டும் மோட்டார் சைக்கிள்

அரசாங்க பணியாளர்களின் மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்காக 500 மில்லியனை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். 2022 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர், பசில் ராஜபக்ஷ வினால் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

அவர் தனது உரையில், 2014 இல் கள உத்தியோகத்தர்களினால் வழங்கப்படுகின்ற அரசாங்க சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நாம் ஆரம்பித்தோம்.

இம்முன்னெடுப்பின் கீழ் 146,381 கள அலுவலர்கள் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்கள் தமது அரசாங்க சேவையினை வழங்குவதற்கு குறித்த மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்துவதை இன்று நான் காணும் போது மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தினை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு நான் திட்டமிட்டுள்ளதுடன் அதன் நன்மைகளை அரசாங்க ஊழியர்களுக்கு மாற்றுகின்ற முறைமையொன்றினையும் செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளேன். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன் என்றார்.

# அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கான ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்க பரிந்துரைப்பதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் தற்போது இடம்பெற்றுவரும் 2021 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட உரையில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார். நடைமுறை சமுர்த்தி செயற்பாடுகளை நவீன மயப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், கிராமிய அபிவிருத்தி இயக்கமாக அதனை மாற்ற எதிர்பார்ப்பதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் காப்புறுதி கூட்டுதாபனத்தின் வணிக ரீதியான அணுகுமுறையை போட்டி நிலைமைக்கு அதனை எடுத்துச் சென்று, சகலருக்கும் பலன் கிடைக்கக் கூடிய வகையில் மாற்றுதல், நேரடியான வருமானத்தை ஈட்டுவதற்கு பயன்படாத சொத்துக்களை பயன்படும் வகையில் மாற்றுதல்.

நாடு முழுவதும் தொலைத்தொடர்பு கட்டமைப்பை விரைவில் நிறுவி, நாடு முழுவதிலுமுள்ள 10,115 பாடசாலைகளுக்கும் உரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அதிவேக இணைய ப்ரோட் பேண்ட் வசதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரச ஊழியர்களுக்கு புதிய சம்பள முறைமை ஏற்படுத்தப்படும். உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டே இது செய்யப்படுகின்றது எனவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

# லயன் குடியிருப்பிற்கு பதிலாக புதிய வீடுகள்

எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் தோட்ட லயன் குடியிருப்புக்களை அகற்றி தனி வீடுகளை உருவாக்க 500 மில்லியன் ரூபாய் ஒதுக்க முன்மொழியப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட உரையின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதேபோல் புதிய தொழிநுட்பத்துடன் கூடிய பெருந்தோட்டங்களை உருவாக்குவது எமது நோக்கமாகும். அரசுக்கு சுமையை ஏற்றாமல் ஏராளமானவர்கள் இத்துறைகளில் செயற்பட்டு வருகின்றனர். எனவே குறிப்பிட்ட அமைச்சுகளும் திணைக்களங்களும் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பார்கள் என நிதி அமைச்சர் தெரிவித்தார்.

## அரச பணியாளர்களுக்கான மகிழ்ச்சிகர செய்தி

ஆசிரியர் சம்பள முரண்பாட்டை ஒரே நேரத்தில் தீர்ப்பதற்கு, 30 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட உரையில் கலந்து கொண்டு நேற்று அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் தனது உரையில், ஆசிரியர் - அதிபர் சேவைகளின் சம்பள முரண்பாட்டினை நீக்குமாறு கோரி ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வந்து அரசாங்கத்தின் மூலம் கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2021.8.30 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினை விரைவாக செயற்படுத்துவதற்காக மேலும் ரூபா 30,000 மில்லியனை சம்பளமாக உட்சேர்ப்பதற்கு முன்மொழியப்படுகிறது.

இது ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பளம் தொடர்பாக தற்பொழுது செலவிடப்படுகின்ற ரூபா 109,000 மில்லியனுக்கு அதிக தொகையினை விட மேலதிக ஒதுக்கீடாகும். தற்பொழுது பயிலுநராக அரசாங்க சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட 53,000 இற்கு அதிக பட்டதாரிகளுக்கு 2022 ஜனவரி மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக ரூபா 27,600 மில்லியன் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, குறித்த முழுத் தொகையினையும் இவ் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 20,000 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 7,600 மில்லியன் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கையில் உயர்தர மருந்துகளை உற்பத்தி செய்ய செய்ய திட்டம்

மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிப்பதுடன், சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு இலங்கையில் உயர்தர மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுடன் கைகோர்த்து தனியார் துறையை ஊக்குவிக்க நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்மொழிந்தார். பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட உரையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு நேற்று (12) தெரிவித்தார்.

மருந்துகளின் விலையை சீராக வைத்திருக்க பொருத்தமான விலை நிர்ணய பொறிமுறையை முன்வைக்க ஏற்கனவே முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ள அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## 3 வருடங்களின் பின் சிகரட் விலை அதிகரிப்பு

சிகரட் மீது அறவிடப்படுகின்ற வரியை உடனடியாக செயல்வலுப்பெறும் விதமாக அதிகரிப்பதற்கும், அதற்கு அமைவாக ஒரு சிகரட்டின் விலையை ஐந்து ரூபாவினால் (5) அதிகரிக்கவும் முன்மொழிவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்மூலம் 8 பில்லியன் ரூபாய் மேலதிக வருமானம் எதிர்பார்க்கப்படுதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 3 வருடங்களுக்கு பின்னர் சிகரட் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். சிகரட் மீது அறவிடப்படுகின்ற வரியை உடனடியாக செயல்வலுப்பெறும் விதமாக அதிகரிப்பதற்கும், அதற்கு அமைவாக ஒரு சிகரட்டின் விலையை ஐந்து ரூபாவினால் (5) அதிகரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

# அதிவேக இணைய ப்ரோட் பேண்ட் வசதி

வீதி அபிவிருத்திக்காக மேலதிகமாக 20,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய முன்மொழிவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான சம கால அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட உரையில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் தனது உரையில், அனைவருக்கும் குடிநீர் வசதி 24 மணி நேரமும் சுத்தமான குடிநீரை வழங்க 15,000 ரூபாய் மில்லியனை ஒதுக்க முன்மொழிவதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டார்.

திரவப்பால் உற்பத்தியை அதிகரிக்க தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக 1,000 மில்லியன் ரூபாயை ஒதுக்க எதிர்பார்க்கின்றோம்.

நடைமுறை சமுர்த்தி செயற்பாடுகளை நவீன மயப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், கிராமிய அபிவிருத்தி இயக்கமாக அதனை மாற்ற எதிர்பார்ப்பதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் காப்புறுதி கூட்டுதாபனத்தின் வணிக ரீதியான அணுகுமுறையை போட்டி நிலைமைக்கு அதனை எடுத்துச் சென்று, சகலருக்கும் பலன் கிடைக்கக் கூடிய வகையில் மாற்றுதல்.

நேரடியான வருமானத்தை ஈட்டுவதற்கு பயன்படாத சொத்துக்களை பயன்படும் வகையில் மாற்றுதல்.

நாடு முழுவதும் தொலைத்தொடர்பு கட்டமைப்பை விரைவில் நிறுவி, நாடு முழுவதிலுமுள்ள 10,115 பாடசாலைகளுக்கும் உரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அதிவேக இணைய ப்ரோட் பேண்ட் வசதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரச ஊழியர்களுக்கு புதிய சம்பள முறைமை ஏற்படுத்தப்படும். உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டே இது செய்யப்படுகின்றது எனவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.